# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

(2015 லிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)



சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா.

இணையத்தளம்: www.nie.lk

மின்னஞ்சல்: info@nie.lk

# கிறிஸ்தவம்

# ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

(2015 லிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)

**சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை**

**தேசிய கல்வி நிறுவகம்**

**ஸ்ரீ லங்கா.**

இணையத்தளம்: www.nie.lk

மின்னஞ்சல்: info@nie.lk

**கிறிஸ்தவம்**

**தரம் 10**

**ஆசிரியர் வழிகாட்டி**

முதற்பதிப்பு 2015

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

- தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் : **info@nie.lk**

பதிப்பு :
பதிப்பகம்
தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 1, 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும்** : கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட இணைப்பாளர்** : அருட்தந்தை கார்ல்டன் டி ஜோசப் சில்வா
விரிவுரையாளர்- தேசிய கல்வி நிறுவகம்.

: அருட்தந்தை றெக்ஸ் கொன்ஸ்டன்டைன்
உதவி செயற்றிட்ட அதிகாரி-
தேசிய கல்வி நிறுவகம்.

## ஆலோசகர் குழு

- பேராயர் அதி.வண. டிலோராஜ் கனகசபை
  இலங்கை திருச்சபை - கொழும்பு மறைமாவட்டம்
- பேராயர் அதி.வண. சாந்தா பிரான்சிஸ்
  இலங்கை திருச்சபை - குருணாகலை மறைமாவட்டம்
- பேராயர் அதி.வண. அருள் அறிவர். டேனியல் எஸ். தியாகராஜா
  தென்னிந்திய திருச்சபை
- அருள் அறிவர். ஏ.டப்ளியு. ஜெபனேசன்
  தலைவர் - இலங்கை மெதடிஸ்த திருஅவை
- அருட்பணி. பிரியந்த விஜேகுணவர்தன
  தலைவர் - இலங்கை பெப்டிஸ்த சங்கம்
- அருட்பணி. சார்லி ஜேன்ஸ்
  தலைவர் - கிறிஸ்தவ சீர்திருத்த சபை
- அருட்பணி. சமன் பெரேரா
  தலைவர் - பிரஸ்பட்டேரியன் திருச்சபை
- கொமிசனர் மெல்கம் இந்துருவகே
  பிரதேச முதல்வர் - இரட்சணிய சேனை
- அருட்பணி. டப்ளியு.பி. எபனேசர் ஜோசப்
  பொதுச் செயலாளர் - இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்
- அருட்பணி. ஹேஷான் டி சில்வா
  இலங்கை பெப்டிஸ்த சங்கம்

- திருமதி. எம். சபாரஞ்சன்
  உதவி கல்வி பணிப்பாளர்- சமய பகுதி, கல்வி அமைச்சு

- அருட்பணி. ஜே.ஏ. மிஹிரி டி சில்வா சல்காது
  நிறைவேற்று செயலாளர் - கிறிஸ்தவ கல்விக்கான ஆணைக்குழு, இ.தே.கி.ம

- அருட்பணி. வில்லியம் விஜேகோன்
  இலங்கை பெப்டிஸ்த சங்கம்

## எழுத்தாளர் குழு

- அருட்பணி. ஜே.ஏ. மிஹிரி டி சில்வா சல்காது
  முதுமாணி (கிறிஸ்தவக் கல்வி)
  நிறைவேற்று செயலாளர் - கிறிஸ்தவ கல்விக்கான ஆணைக்குழு, இ.தே.கி.ம

- திருமதி. நிலந்தி தீபா டி சில்வா
  முதுமாணி (கிறிஸ்தவக் கல்வி) பயிற்றப்பட்ட ஆசிரியர் (கிறிஸ்தவம்)
  மே. மா. /பிலி/மெதடிஸ்த உயர்தர பாடசாலை - மொரட்டுவ

- திருமதி. ரதிக்கா சமந்தி மென்டிஸ்
  முதுமாணி (கிறிஸ்தவக் கல்வி, கிறிஸ்தவ நெறி) சிங்களம் கலைமாணி பட்டபின் கல்வி டிப்ளோமா
  பரி. தோமா கல்லூரி - கல்கிசை

- திருமதி.அருணி இந்திகா பெரேரா ஜயதுங்க
  இறையியல் இளம்மாணி, பட்டபின் கல்வி டிப்ளோமா
  பி'ப் கல்லூரி - கொழும்பு 03

- திருமதி.எம். ரேணுகா தமயந்தி
  கலைமாணி - பட்டபின் கல்வி டிப்ளோமா

- திருமதி. எம்.பி. செல்வநிதி பெரேரா
  ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், பயிற்றப்பட்ட ஆசிரியர் (விஞ்ஞானம்)
  வெஸ்லி கல்லூரி - கொழும்பு 08

- செல்வி.த. ஸ்டெலா தர்ஷினி
  இறையியல் இளம்மாணி
  கிறிஸ்தவ கல்விக்கான ஆணைக்குழு - இ.தே.கி.ம

## ஆசிரியர் கைந்நூலை பாவிப்பதற்கான அறிவுரைகள்

கிறிஸ்தவ நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது

ஆசிரியர் வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாட பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாட பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளை பயன்படுத்துங்கள்.
- மாணவரை சிறு குழுக்களாக பிரித்து குழு செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினை தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும் பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும் பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தை செலுத்துங்கள்.

பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலை பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் மதிப்பீட்டு கணிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தைத் தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளை பிழையின்றி பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாக பெற்றோர்களுக்கும் முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

**அருட்தந்தை கார்ல்டன் டி ஜோசப் சில்வா**
**விரிவுரையாளர்**

**தேசிய கல்வி நிறுவகம்.**

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | III |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | IV |
| பாட ஆலோசனைக் குழு | V |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | VII |
| பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் | X |
| கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல் | 1-56 |

## பாட அறிமுகம்

ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்குவது இக்காலகட்டத்தின் அவசியமாகும். இதற்காக சமயமானது மகத்தான பணியாற்றி வருகின்றது குறிப்பிடத்தக்கது. இக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே சமய பாட கலைத்திட்டமானது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. முழுமை நிறைந்த பிள்ளையின் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளிடைத்திறன் என்பனவற்றுடன் தனிநபர் ஆற்றலுடன் நற்பண்புகளும் வளர வேண்டுமென்பதே கலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

பிள்ளைகள் இறையரசின் கோட்பாடுகளுக்கேற்ப கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாக நிலைத்து வாழும் கிறிஸ்துவை வாழ்வில் பிரதிபலித்தலே இக்கலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ நோக்கு, நிலைப்பாடு, உண்மை சத்தியங்கள் போன்ற தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு 6-11 வரையிலான வகுப்பு மாணவர் உச்ச பயனை அடையவேண்டுமென்பதே கிறிஸ்தவ பாட கலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பாகும்.

தரம் 11 இன் இறுதியில் சமூகத்தின் சவால்களுக்கு முகம் கொடுத்து கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வில் பிரதிபலித்து சமூகத்தில் இறைவிசுவாசத்துடன் முழுமை நிறைந்த புதிய இளம் கிறிஸ்தவனாக உலகுக்கு கொடையாக வழங்குவதற்கு இக் கலைத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மாணவ மையக் கல்வியினூடாக முன்மாதிரியாக செயற்பட்டு கிறிஸ்தவ அடையாளத்துடன் உலகில் ஒளிவீசும் இறையரசின் பிரஜைகளை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதே ஆசிரியரின் பிரதான கடமையாகும். இதற்கான தேர்ச்சிகளை மாணவரில் வளர்த்திட வழிகாட்டி நூலானது ஆசிரியருக்கு உறுதுணையாக அமையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஆசிரிய வழிகாட்டியின் செயற்பாடுகளினூடாக கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் கிறிஸ்தவ பற்றுள்ள மாணவ பரம்பரையை நாட்டுக்கும் உலகுக்கும் வழங்கிடும் மகத்தான பணியை நிறைவேற்றிட புத்தாக்கத் திறனுடைய ஆசிரியராக இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள்.

## தேசிய குறிக்கோள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போீக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

**2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம் சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

மேற்குறிப்பிட்ட தேசிய கல்விக் குறிக்கோள்களும், அடிப்படைத் தேர்ச்சிகளும் இலங்கையின் கல்வி தொடர்பாக தேசிய கொள்கைகள், மற்றும் பிரேரணைகளை உள்ளடங்கிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2003 ஆம் ஆண்டு மார்கழி மாத அறிக்கையிலிருந்து பெறப்பட்டதாகும்

### 10.1.2. பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என்பதை விசுவாசித்து அவர் எமக்கு அளித்துள்ள அருள்கொடைகளை பயன்படுத்தியும் பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்வதற்கும் செயற்படுவர்.

2. கிறிஸ்துவின் அளவற்ற அன்பை அனுபவித்து சமூகம் ஒளிபெறவதற்காக செயற்படுவர்.

3. தூய ஆவியானவரின் வழிநடத்தலால் தமது திறன்கள், ஆற்றல்கள் என்பனவற்றை நல்லதொரு சமூகப் பணிக்காக மற்றும் தேசிய அபிவிருத்திக்காக ஈடுபடுத்துவதற்கு செயற்படுவர்.

4. தேசிய மற்றும் பல்சமய நல்லுறவை வளர்த்து ஒழுக்கம் நிறைந்த சுமூகத்தை உருவாக்குவதற்னு இறையரசின் விழுமியங்களை உறுதுணையாகக் கொள்வர்.

5. நபர்களின் உடல், உள, நல வளங்களுக்கு மனி நேயத்தை மதிப்பதன் அடிப்படையிலான சிறந்த வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வதற்கு இறைவார்த்தையை இணைத்துக் கொள்வர்.

6. சிறப்பான கிறிஸ்தவ வாழ்வின் செயற்பாடுகளுக்கூடாக கிறிஸ்துவுக்கு சான்று பகர்வர்.

### 10.1.3 வகுப்பிற்குறிய தேர்ச்சிகள்

1. இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என விசுவாசிப்பர்.

2. ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.

3. தூய ஆவியானவரால் துணிவும் சக்தியும் பெற்று புதுவாழ்வின் அனுபவத்தைப் பெறுவர்.

4. இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்குவர்.

5. திருவிவிலியத்தை வாழ்விற்கு வழிகாட்டியாகக் கொள்வர்.

## 10.1.4. கிறிஸ்தவம் தரம் 10
## பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1. இறைவனே படைப்பிற்கெல்லாம் மூல காணம் என விசுவாசிப்பர். | 10.1.1. திருவிவிலியத்தில் விசேட பிறப்பு குறித்த இறைவாக்குகளை வெளிப்படுத்துவர். | 1. இயேசுவின் பிறப்பு குறித்த இறைவாக்குகள்.<br>எசாயா 7:14,<br>எசாயா 11:1,<br>எசாயா 9:2,6,7<br>மீக்கா5:20 | ● கிறிஸ்து பிறப்பு பற்றி குறிப்பிடும் பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளை சேகரிப்பர்.<br>● அறிவிக்கப்பட்ட இறைவாக்குகள் நிறைவேறியது என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● இறைவாக்குகளை ஆக்கபூர்வமாக முன்வைப்பர்.<br>● கிறிஸ்து பிறப்பு மக்களுக்கு நற்செய்தியானது என விசுவாசிப்பர்.<br>● கிறிஸ்து பிறப்பு பற்றிய நற்செய்தியை மற்றவர்களுக்கும் அறிவிப்பர். | 2 |
| | 10.1.2. விசேட பணிகள் குறித்த இறை வாக்குகளை கற்பர். | 2. பணிகள் குறித்த இறைவாக்குகள்.<br>எசாயா 53:4-5,<br>எசாயா 42:4,<br>மலாக்கி 3:1,<br>எசாயா 61:1,<br>எசாயா 40:3,4 | ● விசேட பணிகளை குறித்த இறைவாக்குகளை விபரிப்பர்.<br>● பணியின் சிறப்புத்தன்மை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள இறைவாக்குகளை ஏற்றுக்கொள்வர்.<br>● இறைவாக்குகளை ஆக்கபூர்வமான செயற்பாடு மூலம் முன்வைப்பர்.<br>● விசேட பணிகளில் ஈடுபட வேண்டும் என விசுவாசிப்பர்.<br>● ஒன்றிணைந்து பணியாற்றுவர். | 2 |
| 2. ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ் வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர். | 10.2.1. இறைசித்தத்தை கீழ்படிவுடன் நிறைவேற்றுவர். | 1. விசேட பிறப்புக்களின் முன்னறிவிப்பு.<br>லூக்கா1:5 - 56<br>(இயேசு, திருமுழுக்கு யோவான்) | ● விசேட பிறப்பு குறித்து விபரிப்பர்.<br>● எமக்கு இறைசித்தம் வெளிப்படுத்தப்படும் என ஏற்றுக் கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>● இறைசித்தத்திற்கு தலைவணங்குவர்.<br>● இறை வழிநடத்தலை பெற்று ஒற்றுமையாக வாழ்வர். | 2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 10.2.2. விசேட பிறப்பால் வாழ்வில் ஒளி பெறுவர். | 2. விசேட பிறப்புக்கள் லூக்கா 1:57-2:20) | ● திருமுழுக்கு யோவான் மற்றும் இயேசுவின் பிறப்பு பற்றிய விபரங்களை சேகரிப்பர்.<br>● இயேசுவின் பிறப்பின் மூலம் இறைசித்தம் நிறைவேறியதென ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்க பூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>● நற்செய்திக்கு சரியான பிரதிபலிப்பை காட்டுவர்.<br>● நற்செய்திக்கு சான்று பகர்வர். | 2 |
| | 10.2.3. கிறிஸ்தவ பிள்ளை என்ற அடிப்படையில் தேசிய பாரம்பரியங்களை மதிப்பர். | 3. இயேசுவில் நிறைவேற்றப்பட்ட யூத சடங்குகள். (லூக்கா 2:21-52) | ● இயேசுவுக்காக அவரது பெற்றோர் நிறைவேற்றிய யூத சடங்குகள் குறித்த தகவல்களை சேகரிப்பர்.<br>● இயேசு தனது பெற்றோருக்கு கீழ்படிவுள்ள பிள்ளையாக வளர்ந்தார் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>● தேசிய பாரம்பரியங்களுக்கு மதிப்பளிப்பர்.<br>● கிறிஸ்தவராக தேசிய தனித்துவத்தோடு வாழ்வர். | 2 |
| | 10.2.4. திருமுழுக்கு யோவானின் மனம்திரும்புதலின் வாழ்வுக்கு உறுதுணையாக கொள்வர். | 4. திருமுழுக்கு யோவானின் பணி - முன்னோடி பணி (லூக்கா 3:1-20) | ● திருமுழுக்கு யோவான் மக்களுக்கு வழங்கிய போதனைகளின் கருத்துக்களை சேகரிப்பர்.<br>● நல்லவைகளை செய்து சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.<br>● பிறருக்கு முன்மாதிரியாக வாழ்வர்.<br>● எமது உடைமைகளை பகிர்ந்து வாழவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர். | 3 |
| | 10.2.5. இயேசுவின் பணியின் நோக்கத்தை வாழ்வுக்கு முன்மாதிரியாக கொள்வர். | .5. இயேசுவின் திருப்பணியின் ஆரம்பம் - (நாசரேத்து போதனை) (லூக்கா 3:23, லூக்கா4:14-30) | ● இயேசு நாசரேத்தில் ஆற்றிய போதனைகள் பற்றிய தகவல்களை சேகரிப்பர்.<br>● இயேசுவின் பணியின் நோக்கம் இறையரசை பரப்புதல் என்பதை விசுவாசிப்பர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.<br>● சமூக சவால்களின் மத்தியில் தளராது செயற்படுவர்.<br>● சவால்களை வெற்றி கொள்வர். | 1 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 10.2.6. இறை -யழைப்புக்கு தகுந்த மறுமொழி கூறுவர். | 6. இயேசுவின் திருப்பணியின் பரம்பல் முதல் சீடர்களை அழைத்தல் (லூக்கா5:1-11)<br>• பன்னிருவரை தேர்ந்தெடுத்தல் (லூக்கா 12-16).<br>• நற்செய்தி பணி (லூக்கா 9:46-48, 10:1-12, 17:20) | ● இயேசு சீடர்களை அழைத்தல் தொடர்பான தகவல்களை சேகரிப்பர்.<br>● இயேசுவின் பணியில் பங்குதாரர் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான அறிக்கை சமர்ப்பிப்பர்.<br>● இயேசு அழைக்கும்போது தகுந்த மறுமொழி காட்டுவர்.<br>● ஒன்றிணைந்து பணிபுரிவர். | 2 |
| | 10.2.7. தராதரம் பாராது அனைவரையும் ஏற்றுக்கொள்வர். | 7. இயேசுவின் திருப்பணியில் புதிய சமூக எண்ணக கருக்கள் குடும்பம் (லூக்கா 8:19-21)<br>• பெண்கள் (லூக்கா 8:1-3, 10:38-42, 7:36-50, 8:43-48, 13:10-17)<br>• சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் (லூக்கா19:1-105:12-16)<br>• சிறுவர் (லூக்கா 9:46-48, 18:15-17, 17:1-2) | ● இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பெண்கள், சிறுவர்களின் தகவல்களை சேகரிப்பர்.<br>● இயேசு பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பெறுமதியை அளித்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.<br>● தராதரம் பாராது செயற்படுவர்.<br>● எல்லோரையும் நேசித்து வாழ்வர். | 3 |
| | 10.2.8. சமூக கட்டமைப் -பில் நேரிய உரையாடல், பயனுள்ள விமர்சனங்கள் மத்தியில் வாழ்வை நல்வழிப் படுத்துவர். | 8. இயேசுவின் பணிகளுக்கு சவால் பரிசேயர் (லூக்கா5:17 -39, 6:1-5, 11:37-44, 7:18-35, 12:1-3, 16:14-17, 17:20-21, 14:1-6)<br>• மறைநூல் அறிஞர்(லூக்கா 6:6-11, 11:45-54, 20:45-47) | ● யூத சமூகத்தில் இயேசுவுக்கு ஏற்பட்ட சவால்களின் தகவல்களை சேகரிப்பர்.<br>● இயேசு சோதனைகளுக்கு நேரிய மறுமொழி காட்டினார் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான பதில்களை முன்வைப்பர்.<br>● விமர்சனங்களுக்கு நேரிய பதில் காட்டுவர்.<br>● நேரிய காட்சியுடன் ஒன்றித்து வாழ்வர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 10.2.9. சமூக சவால்களின் மத்தியில் பணி செய்திட பலம் பெறுவர். | 9. இயேசுவின் பணிகளுக்கு சதுசேயரின் சவால் (லூக்கா 20:1-40) | ● சதுசேயர் குறித்த தகவல்களை சேகரிப்பர்.<br>● அக்கால சமூகத்தில் காணப்பட்ட தவறான மனப்பான்மைகளை இயேசு மாற்றியமைத்தார் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான அறிக்கை சமர்ப்பிப்பர்.<br>● நல் மனப்பான்மைகளை வளர்த்துக்கொள்வர்.<br>● சவால்களின் மத்தியில் அனைவருடனும் இணைந்து வாழ்வர். | 2 |
| | 10.2.10. சமூக சவால்களின் மத்தியில் சகோதர ஒருமைப்பாட்டுடன் வாழ்வர். | 10. துன்புறுதலுக்கு முன் நிகழ்வுகள்.<br>• இயேசு எருசலேம் செல்லுதலும் ஆலயத்தை தூய்மையாக்குதலும் (லூக்கா 19:28-48)<br>• இறுதி திருவிருந்தும் யூதாசின் சதித்திட்டமும் (லூக்கா 22:1-23) | ● துன்புறுத்தலின் முன்நிகழ்வுகளை பட்டியல் படுத்துவர்.<br>● இயேசுவை அரசனாக ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.<br>● இயேசுவின் உடலுக்கும் இரத்தத்திற்கும் நாம் பங்குதாரர் என விசுவாசிப்பர்.<br>● இயேசுவின் வாழ்வின் முன்மாதிரிகளுடன் செயற்படுவர்.<br>● இயேசுவின் உடலும் இரத்தமும் எமக்காக பலியிடப்பட்டது என்பதை விசுவசிப்பர். | 3 |
| | 10.2.11. இறைவேண்டுதலில் இறைசித்தத்தை நிறைவேற்றுவர். | 11. ஒலிவமலை (கெத்சமனி தோட்டம்) லூக்கா22:39-53) | ● ஒலிவமலை நிகழ்வுகளின் தகவல்களை தொகுப்பர்.<br>● இறைவிருப்புக்கு இயேசு இணங்கினார் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.<br>● எப்போதும் இறை விருப்புக்கு கீழ்ப்படிவர்.<br>● இறைவிருப்புக்கேற்ப இணைந்து வாழ்வர். | 1 |
| | 10.2.12. அநீதிகளின் முன்னிலையில் அசையாது வாழ்வர். | 12. இயேசுவை நியாயம் விசாரித்தலும் சிலுவையில் அறைதலும். (லூக்கா 22:63-23:25, 23:33,44,49) | ● யேசு தீர்ப்புக்குள்ளாக்கப்பட்ட சந்தர்ப்பம் தொடர்பான கருத்துக்களை சேகரிப்பர்.<br>● இயேசு எமக்காக சிலுவையில் அறையப்பட்டார் என்பதை ஏற்றுக்கொள்வர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 10.2.13. மனச்சான்றுக்கு ஏற்ப கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்று பகர்வர். | 13 இயேசுவின் துன்புறுதலுக்கு மாறுத்தரம் காட்டியவர்களும் இயேசுவின் மாறுத்தரமும். (லூக்கா 23:34,42,46)<br>• பேதுருவின் அறிக்கையும் பேதுரு மறுதலித்தலும் (லூக்கா 9:18-20, 22:31-34, 22:54-62)<br>• சிரேன் ஊர் சீமோன் (லூக்கா 23:26<br>• பெண்கள் (லூக்கா23:27-31)<br>• குற்றவாளிகள் (லூக்கா 23:32-33, 39-42)<br>• காவல் படைவீரர் (லூக்கா 23:35-38)<br>• அரிமத்தியா ஊர் யோசேப்பு (லூக்கா 23:50- 53) | ● ஆக்கபூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>● சுயலாபத்திற்காக தவறு செய்யாதிருக்க தூண்டப்படுவர்.<br>● நீதிக்காக வாழ்வதற்கு தம்மை அர்ப்பணிப்பர்.<br>● இயேசுவின் துன்ப நிகழ்வில் பங்கேற்றவர்கள் குறித்த தகவல்களை சேகரிப்பர்.<br>● இயேசு கிறிஸ்து இறை மைந்தன் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான சிறு புத்தகமொன்றை முன்வைப்பர்.<br>● மனச்சான்றுக்கு இணங்கச் செயற்படுவர்.<br>● கிறிஸ்தவ சாட்சியாளர்களாக வாழ்வர். | 3 |
| | 10.2.14. வாழும் இறைவனுக்குள் வெற்றி வாழ்வு வாழ்வர். | 10.2.14. இயேசு உயிர்பெற்று எழுதலும், விண்ணேற்றம் அடைதலும் (லூக்கா 24:) | ● இயேசுவின் உயிர்ப்பை அனுபவித்தவர்களைப் பற்றிய தகவல்களை சேகரிப்பர்.<br>● இயேசு மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார் என விசுவாசிப்பர்.<br>● ஆக்கபூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>● இயேசு உயிருள்ள ஆண்டவர் என்பதை விசுவாசிப்பர்.<br>● புதிய எதிர்நோக்கோடு வெற்றிகரமாக செயற்படுவர். | 1 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 3. தூய ஆவியான வரால் துணிவும் சக்தியும் பெற்று புது வாழ்வின் அனுபவத்தைப் பெறுவர். | 10.3.1. தூய ஆவியானவரின் துணையால் இறைபணிக்கு அர்ப்பணிப்பர். | 1 இயேசு திருமுழுக்கு பெறல் (லூக்கா 3:21-22) | ● இயேசுவின் திருமுழுக்கு குறித்த கருத்துக்களை சேகரிப்பர்.<br>● தூய ஆவியானவர் எப்போதும் செயற்பட்டு வருகின்றார் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.<br>● இறை வேண்டுதலால் தூய ஆவியின் செயற்பாடுகளை அறிய முடியும் என்பதை விசுவாசிப்பர்.<br>● ஒன்றிணைந்து இறைவேண்டலில் ஈடுபடுவர். | 2 |
| | 10.3.2. தூய ஆவியானவரின் வழிகாட்டுதலுடன் சோதனைகளில் வெற்றி பெறுவர். | .2. இயேசு சோதனைகளை வெற்றி கொள்ளல். (லூக்கா 4:1-13) | ● இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள், அதனை வெற்றி கொண்ட முறைகள் தொடர்பான கருத்துக்களை சேகரிப்பர்.<br>● சோதனைகளை வெற்றி கொள்ள இறைவார்த்தை அடித்தளமாக இருக்கின்றது.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.<br>● தூய ஆவியின் வழிநடத்தலால் சோதனைகளை வெற்றி கொள்ள முடியும் என விசுவாசிப்பர்.<br>● வாழ்வில் சோதனைகளை வெற்றிகொள்வர். | 3 |
| | 10.3.3 பொருத்தமான காட்சியுடன் வாழ்வை கட்டியெழுப்புவர். | 3. இயேசுவின் தோற்றம் மாறுதல் (லூக்கா 9:28-36) | ● இயேசுவின் தோற்றம் மாறுதல் நிகழ்வை ஆழமாக கற்பர்.<br>● இந்நிகழ்வின் மூலம் சீடர்கள் புதிய எதிர்நோக்கில் ஈடுபட்டனர் என ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.<br>● இயேசு இறைமைந்தன் என விசுவாசிப்பர்.<br>● இயேசுவின் பணியில் பங்குகொள்வர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 4. இறையரசின் விழுமியங் களை கடைப் பிடித்து ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்குவர். | 10.4.1. இறையரசின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். | 1. இறையரசும் வளர்ச்சியும் - இறையரசு அறிமுகம் (லூக்கா 8:4-15, 13:18-21) | ● இறையரசு பற்றிய உவமைகளை விளங்கிக் கொள்வர்.<br>● இறையரசு வளர்ச்சியடைகின்றது என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● உவமைகளின் உதவியுடன் இறையரசின் வளர்ச்சி தொடர்பான சிறு பக்கப்புரட்டி தயாரிப்பர்.<br>● இன்றைய உலகில் இறையரசு விருத்தியடைகின்றது என விசுவாசிப்பர்.<br>● இறையரசின் விருத்திக்காக இணைந்து செயற்படுவர். | 2 |
| | 10.4.2. இறையரசின் அடையாளங் களினாலும் அற்புதங்களி னாலும இறை வல்லமையை காண்பர். | 2. அடையாளங்களும் அற்புதங்களும் காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் அடக்குதல் (லூக்கா8:22-25)<br>• ஐயாயிரம் பேருக்கு உணவ ளித்தல் (லூக்கா 9:10-17)<br>• யவீருவின் மகள் (லூக்கா 8:40-42 49-56)<br>• நயீன் ஊர் கைம்பெண் மகன் உயிர்பெறுதல் (லூக்கா 7:11-17),<br>• பேய்பிடித்தவர் குணப்படுதல் (லூக்கா4:31-37 11:14-23)<br>• எரிகோவில் பார்வையற்றவர் பார்வை பெறுதல் (லூக்கா 18:35-43)<br>• நூற்று தலைவரின் பணியாளர் குணமடைதல் - லூக்கா 7:1-10) | ● இறையரசின் அற்புதங்கள் அடையாளங்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பர்.<br>● இயேசு பல அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார் என ஏற்றுக்கொளவர்.<br>● இறையரசின் அற்புதங்கள் அடையாளங்கள் பற்றிய ஆக்கபூர்வமான அறிக்கை சமர்ப்பிப்பர்.<br>● நாளாந்த வாழ்வில் இறைவல்லமையை விசுவாசத்துடன் அனுபவிப்பர்.<br>● அற்புதங்களையும் அடையாளங்களையும் அனுபவபூர்வமாக கண்டு இறையரசின் பணியில் ஈடுபடுவர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 10.4.3. கிறிஸ்தவ கொள்கை களுக்கேற்ப வாழ்வர். | 3. இறையரசின் கொள்கைகள் பெரிய விருந்து உவமை (லூக்கா14:15-24)<br>• காணாமற்போன ஆடு, காணாமற் போன காசு, காணாமற்போன மகன் (லூக்கா 15:1-32) | ● இறையரசின் கொள்கைகளை விபரிப்பர்.<br>● இறையரசின் கொள்கைகளுக்கேற்ப வாழ வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● இறையரசின் கொள்கைப் பட்டியலை ஆக்கபூர்வமாக எழுதிக்காட்டுவர்.<br>● இறையரசின் கொள்கைகளுக்கேற்ப வாழும்போது வாழ்வானது நல்வழிப்படும் என்பதை விசுவாசிப்பர்.<br>● இறையரசின் கொள்கைகளை மதித்து வாழ்வர். | 2 |
| | 10.4.4. தமது ஆற்றல்களை தாழ்வுடன் இறை கௌரவத்துக்காக பாவிப்பர். | 4. இறையரசின் குடிமக்கள் இயேசுவைப் பின்பற்ற விரும்பியவர்கள் (லூக்கா9:57-62)<br>• தொண்டுசெய்தல் (லூக்கா 10:25-37)<br>• முன்மதியோடு செயற்படல் (லூக்கா 16:19)<br>• ஆற்றல்களை பயன்படுத்து தல்( லூக்கா 19:11-27)<br>• பணியாள் தலைமைத்துவம் (லூக்கா 22:24-30) | ● இறையரசின் பிரஜைகளின் பண்புகள், இயல்புகளை விளங்கிக் கொள்வர்.<br>● கிறிஸ்தவர் இறை மகிமைக்காக பணிவோடு தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான நாடக பிரதியை தயாரிப்பர்.<br>● நற்பண்புகளை வளர்த்துக்கொண்டு பணியாற்ற வேண்டும் என விசுவாசிப்பர்.<br>● நற்பணிகளில் ஈடுபடுவர். | 3 |
| | 10.4.5. இறையரசு குடிமக்களின் கடமைகளை கிரகிப்பர். | 5. இறையரசு குடிமக்களின் மனநிலைகள் (பின்னிட்டு செல்லாமை (லூக்கா9:57-62)<br>• உலக உடைமைகள் (லூக்கா 12:13-34, 18:18-30, 16:9-31)<br>• இக்கட்டான நிலை (லூக்கா 14:25-33)<br>• தாழ்வு (லூக்கா 18:9-14) | ● இறையரசின் சவால் நிறைந்த நிலையினை விளக்குவர்.<br>● சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என ஏற்றுக்கொள்வர்.<br>● "இறையரசின் பிரஜைகளுக்கு இயேசுவின் சவால்" எனும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதுவர்.<br>● சவால்களை வெற்றிகொள்ள இயேசு துணிவை தருகிறார் என்பதை விசுவாசிப்பர்.<br>● சவால்களை வெற்றி கொண்டு ஒன்றித்து செயல்படுவர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 10.4.6. கிறிஸ்தவன் என்ற வகையில் கடமைகளை ஆயத்தமுடன் செய்வர். | 6 இறையரசுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படல்.<br>• விசுவாசமுள்ள பணியாள் (லூக்கா12: 35-40)<br>• மனம் மறாவிடில் அழிவு (லூக்கா13:1-9)<br>• இடுக்கமான வாயில். (லூக்கா 13:22-30)<br>• விசுவாசமுள்ள, விசுவாசமற்ற பணியாளா் (லூக்கா 12:42-48) | • இறையரசின் பிரஜைகள் சரியான ஆயத்தத்துடன் செயற்பட வேண்டிய முறையை விளக்குவர்.<br>• ஆயத்தமாகுதல் அவசியம் என ஏற்றுக்கொள்வர்.<br>• பாடலொன்றை தயாரிப்பர்.<br>• ஆயத்தத்தோடும் அர்ப்பணிப்போடும் செயற்படுவோருக்கு நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்ள முடியும் என விசுவாசிப்பர்.<br>• சரியான ஆயத்தத்துடன் செயற்படுவர். | 3 |
| 5. திருவிவிலியத்தை வாழ்விற்கு வழிகாட்டியாகக் கொள்வர். | 10.5.1 இறைவார்த்தையால் ஒளி பெறுவர். | 1. சமவெளிப் பொழிவு (லூக்கா 6:17-49)<br>• பேறுபெற்றோரும் கேடுற்றோரும் (லூக்கா 6:20-26)<br>• பகைவரிடம் அன்பு காட்டுதல் (லூக்கா6:27-36)<br>• பிறரை தீர்ப்பிடுதல் (லூக்கா 6:37-42)<br>• மரமும் கனியும் (லூக்கா6:43-45)<br>• இரு அடித்தளங்கள் (லூக்கா 6:46-49) | • சமவெளிப் பொழிவில் வெளிப்படும் கருத்துக்களை அட்டவணைப்படுத்துவர்.<br>• பகைவரை நேசிக்க வேண்டம் என ஏற்றுக்கொள்வர்.<br>• ஆக்கபூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.<br>• இறைவார்த்தையில் வாழ்வை கட்டியெழுப்புவர்.<br>• சமுதாயத்தில் மற்றவர்களோடு இணைந்து வாழ்வர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 10.5.2. கிறிஸ்துவின் போதனைகளை நாளாந்தவாழ்வில் பின்பற்றுவர் | 2. இயேசுவின் போதனைகள் விண்ணப்பம் (லூக்கா11:1-13இ 18:1-8)<br>• உடலுக்கு ஒளி (லூக்கா 8:16-18)<br>• விருந்தோம்பல் (லூக்கா 14:7-11)<br>• ஏழை கைம் பெண்ணின் காணிக்கை (லூக்கா21:1-4)<br>• விசுவாசம் (லூக்கா17:5-10)<br>• தனிப்பட்ட தேவைகளுக்காக கவலையடைதல் (லூக்கா 12:22-32)<br>• பத்து தொழுநோயாளர் (லூக்கா 17:11-19 | ● இயேசுவின் போதனைகளில் வெளிப்படும் கருத்துக்களை சேகரிப்பர்.<br>● இயேசுவின் போதனைகளை கடைப்பிடிக்க வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● அவதானமாக வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>● இறையாசிகளுக்காக நன்றி கூறுவர்.<br>● இயேசுவின் போதனைகளுக்கேற்ப ஒன்றித்து செயற்படுவர். | 3 |

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்

**தேர்ச்சி 1:0** : இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என விசுவாசிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 10.1.1** : பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய இறைவாக்குகளை வெளிப்படுத்துவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- கிறிஸ்து பிறப்பு பற்றி குறிப்பிடும் பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளை சேகரிப்பர்.
- அறிவிக்கப்பட்ட இறைவாக்குகள் நிறைவேறியது என்பதை ஏற்றுக்கொள்வர்.
- இறைவாக்குகளை ஆக்கபூர்வமாக முன்வைப்பர்.
- கிறிஸ்து பிறப்பு மக்களுக்கு நற்செய்தியானது என விசுவாசிப்பர்.
- கிறிஸ்து பிறப்பு பற்றிய நற்செய்தியை மற்றவர்களுக்கும் அறிவிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- வகுப்பறையில் தொங்கவிடப்பட்ட பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் கிறிஸ்து பிறப்பு பற்றிய இறைவாக்குகளை காட்சிப்படுத்துங்கள்.
- இறைவாக்குகளை மாணவர்கள் உரத்து கூறுவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - விசேட பிறப்பை குறிப்பிடுகின்ற திருவிவிலிய பகுதி
    - அவை இறைவாக்குகள் ஆகும்.
    - இறைவாக்குகளின் மூலம் விசேட பிறப்பு அறிவிக்கப்பட்டது.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வு பத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(45 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.
    - கிறிஸ்து பிறப்பு பற்றி பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகின்றது.
    - வெவ்வேறு இறைவாக்கினரும் கிறிஸ்து பிறப்பு பற்றிய இறைவாக்குகளை அறிவித்தார்கள்.
    - இயேசுவின் பிறப்பு பற்றிய இறைவாக்கு (எசாயா 17:14, 11:1, மீக்கா 5: 2)
    - பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்படும் கிறிஸ்து பிறப்பின் சிறப்புத் தன்மை.
    - பழைய ஏற்பாட்டின் இறைவாக்குகள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறியது.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (எசாயா 7:14, 11:1, 9:2,6,7 மீக்கா 5:2 )
- ஆக்கபூர்வமாக ஒழுங்கமைக்கப்பட்ட கிறிஸ்து பிறப்பு தொடர்பான இறைவாக்குகள்
- நிறக்டதாசி, A4 தாள், பசை, கத்தரிக்கோல், நிறப்பேனைகள், பிறிஸ்டல் மட்டை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

**குழு : 1** குழுவுக்கு தலைவரை நியமியுங்கள்.

எசாயா 7: 14, 11:1, 9:2, 6:7, மீக்கா 5:2 வாசியுங்கள்.

இப்பகுதிகளில் குறிப்பிடப்படும் இறைவாக்குகளை ஆக்கபூர்வமாக பக்கப் புரட்டியாக முன்வையுங்கள்.

**குழு : 2** திருவிவிலியத்தில் ப.ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் விசேட பிறப்பு குறித்து வேறு 5 இறைவாக்குகளை சேகரியுங்கள்.

அவற்றை A4 தாளில் வெவ்வேறாக குறிப்பிடுங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்குஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

நாளாந்த குடும்ப செபவேளையில் இறைவாக்கினர்களின் நூலை வாசிப்பதற்கு ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 1:0** : இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என விசுவாசிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 10.1.2** : விசேட பணிகள் குறித்த இறைவாக்குகளை கற்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- விசேட பணிகளை குறித்த இறைவாக்குகளை விபரிப்பர்.
- பணியின் சிறப்புத்தன்மை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள இறைவாக்குகளை ஏற்றுக்கொள்வர்.
- இறைவாக்குகளை ஆக்கபூர்வமான செயற்பாடு மூலம் முன்வைப்பர்.
- விசேட பணிகளில் ஈடுபட வேண்டும் என விசுவாசிப்பர்.
- ஒன்றிணைந்து பணியாற்றுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இறைவாக்குகள் எழுதப்பட்ட விசேட அட்டைகள் ஐந்தை மறு பக்கமாக ஆசிரியரின் மேசைமீது வைக்கவும்.
- ஐந்து மாணவர்களை அவற்றில் ஒவ்வொன்று வீதம் தெரிவுசெய்து அதனை வகுப்பறையில் முன்வைப்பதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - பணிகள் குறித்து பல இறைவாக்கினர்கள் இறைவாக்குரைத்துள்ளனர்.
    - இறைவாக்குகளின் மூலமாக இறைதிட்டத்தை அறிந்துகொள்ள முடியும்.
    - இவ் இறைவாக்குகள் நிறைவேறியுள்ளன.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வுபத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(45 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.
    - இயேசு துன்பங்களுக்கு மத்தியில் விசேட பணியை ஆற்றினார்- எசாயா 53:4-5
    - இயேசுவின் விசேட பணியினூடாக நீதி தழைத்தோங்கியது.
    - திருமுழுக்கு யோவான் வழியை ஆயத்தம் செய்யும் முன்னோடிப் பணியை ஆற்றினார்.
    - இயேசு சிறைப்பட்டோரை விடுதலையாக்கி, உள்ளம் உடைந்தோரை குணப்படுத்தினார்.
    - நாமும் பணிக்காக அழைக்கப்பட்டுள்ளோம்.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (எசாயா 40:3,4, 42:4, 53:4-5, மலாக்கி 3:1எசாயா 61: 1)
- இறைவாக்குகள் எழுதப்பட்ட விசேட அட்டைகள்.
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவுக்கு கிடைக்கப்பட்டுள்ள திருவிவிலியப் பகுதியை வாசியுங்கள்.
- அதைக்குறித்து ஏனையவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- அதற்கேற்ப உங்கள் குழுக்களுக்கு கிடைத்துள்ள செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

குழு : 1 **எசாயா 40: 3-4** ஐ வாசியுங்கள்.
இயேசுவின் பணியினது சிறப்புத்தன்மையைக் வெளிக்காட்டும்
கவிதையொன்றை எழுதுங்கள்.
**எசாயா 42:4** ஐ வாசியுங்கள்.
பணியின் சிறப்புத்தன்மையை எழுதுங்கள்.

குழு : 2 **எசாயா 53 : 4-5** ஐ வாசியுங்கள்
பணியின் சிறப்புத்தன்மை குறித்து உங்கள் கருத்துக்களை கூறுங்கள்.
**எசாயா 61:1** ஐ மனன வசனமாக ஆக்கபூர்வமாக தயார் செய்யுங்கள்.

குழு : 3 **மலாக்கி 3 :1** ஐ வாசியுங்கள்.
அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணியின் சிறப்புத்தன்மை தொடர்பாக குறிப்பெடுங்கள்.
அதைக்குறித்து கதையொன்றை முன்வையுங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

ஞாயிறு வழிபாட்டில் பங்கெடுத்து பணியாற்ற பிள்ளைளை ஈடுபடுத்துங்கள்.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

குழு : 1 **லூக்கா 24:1-12** திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.

- நீங்கள் இயேசுவை பார்க்கச் சென்ற பெண்களில் ஒருவர் எனக் கருதி உங்கள் உள்ளத்தின் வெளிப்பாட்டை கட்டுரையாக எழுதுங்கள்.

குழு : 2 **லூக்கா 24:13-35** திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.

- எம்மாவு பயணித்த சீடர்கள் தொடர்பான நிகழ்வை நாடக பிரதியாக தயாரியுங்கள்.

குழு : 3 **லூக்கா 24:36-53** திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.

- உயிர்த்த இயேசு சீடர்களுக்கு காட்சியளித்ததை ஆக்கபூர்வமாக முன்வையுங்கள். (கவிதை, பாடல், உரையாடல்)
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

## இணைப்பு 2

கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்
கைகொட்டிப் பாடிடுவோம்
இயேசு ராஜன் உயிர்த் தெழுந்தார் அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம்

1. பார் அதோ கல்லறை மீறின பெருங்கல்
புரண்டுருண்டோடுது பார் - அங்கு
போட்ட முத்திரை காவல் நிற்குமோ தேவ புத்திரர் சந்நிதி முன்

2. வேண்டாம் வேண்டாம் அழுதிட வேண்டாம்
ஓடி உரைத்திடுங்கள் - தாம்
கூறின மாமறை விட்டனர் கல்லறை போங்கள் கலிலேயாவுக்கு

3. அன்னா காய்பா ஆரியர் சங்கம் அதிரடி
கொள்ளுகின்றார் - இன்னா
பூத கணங்கள் இடி ஒலிகண்டு பயந்து நடுங்குகின்றார்

4. வாசல் நிலைகளை உயர்த்தி நடப்போம் வருகிறார்
ஜெயவீரன் - உங்கள்
மேள வாத்தியம் கைமணி பூரிகை எடுத்து முழங்கிடுவோம்

**வீட்டுச் சூழல்**

ஞாயிறு சமய நிகழ்வுகளுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு பழக்கப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3:0** : தூய ஆவியானவரால் துணிவும் சக்தியும் பெற்று புது வாழ்வின் அனுபவத்தை பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 10.3:1** : தூய ஆவியானவரின் வருகைக்கு இடமளிப்பர்.

**பாடவேளை** : 01

**கற்றல் பேறு** :

- இயேசுவின் திருமுழுக்கு குறித்த கருத்துக்களை சேகரிப்பர்.
- தூய ஆவியானவர் எப்போதும் செயற்பட்டு வருகின்றார் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.
- இறை வேண்டுதலால் தூய ஆவியின் செயற்பாடுகளை அறிய முடியும் என்பதை விசுவாசிப்பர்.
- ஒன்றிணைந்து இறைவேண்டலில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இயேசு திருமுழுக்கு பெறும் படங்களை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர் அவற்றை அவதானிப்பதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை கலந்துரையாடுங்கள்.

  - திருமுழுக்கு யோவானிடம் இயேசு திருமுழுக்கு பெற்றார்.
  - இயேசு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தபோது தூய ஆவி புறா வடிவில் அவர்மீது இறங்கியது.
  - வானத்திலிருந்து இறைகுரல் ஒலித்தது.
  - தூய ஆவியானவர் உலகில் செயற்படுகின்றார்.

(8 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வு பத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(20 நிமிடங்கள்)

படிமுறை 3

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.

  - திருமுழுக்கு யோவான் மனந்திரும்புதலின் திருமுழுக்கை கொடுத்தார்.
  - பாவமற்ற இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்றார்.
  - இயேசு திருமுழுக்கால் மனித உறவை வலுப்படுத்தினார்.
  - இயேசுவின் திருமுழுக்கு சிறப்பான நிகழ்வாகும்.
  - இயேசுவின் திருமுழுக்கில் திரித்துவம் வெளிப்பட்டது.

- இறை வேண்டுதல் நிறைந்த வாழ்வில் தூய ஆவி பிரசன்னமாக இருப்பார்.
- பாவமற்ற இயேசு

((12 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (லூக்கா 3:21-22)
- இயேசு திருமுழுக்கு பெறும் காட்சிப் படங்கள்
- A4 தாள், பேனை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- லூக்கா 3:21-22 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- இறைச் சமூகத்தில் இணைந்து இறைவேண்டுதலில் ஈடுபடுங்கள்.
- திருவிவிலிய பகுதியில் வெளிப்படும் கருத்துக்களை கலந்துரையாடுங்கள்.

குழு : 1 திருவிவிலிய பகுதியில் காணப்படும் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. லூக்கா 3:21-22 இல் குறிப்பிட்டவாறு இயேசுவின் திருமுழுக்கு தொடர்பான நிகழ்வுகள் யாவை?
2. இந்நிகழ்வில் திரித்துவத்தின் பிரசன்னத்தை பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும்.?
3. தூய ஆவியின் பிரசன்னத்தை பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும்.?

குழு : 2 ‘‘இயேசுவின் திருமுழுக்கின் பொருள்’’ என்பதில் பின்வரும் கருத்துக்களை உள்ளடக்கி கிறிஸ்தவ சஞ்சிகைக்கு கடிதம் ஒன்று வரைக.

- இயேசுவின் திருப்பணியின் ஆரம்பம்
- திருமுழுக்கு யோவானுக்கும் இயேசுவுக்கும் இடையிலான உறவு.
- இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெறுவதற்கான காரணம்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**வீட்டுச் சூழல்**

குடும்ப செபத்தில் பிள்ளைகளை தவறாது பங்குபற்றச் செய்யுங்கள்.

**தேர்ச்சி 3:0** : தூய ஆவியானவரால் துணிவும் சக்தியும் பெற்று புது வாழ்வின் அனுபவத்தை பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 10.3:2** : சோதனைகளில் வெற்றிபெற தூய ஆவியின் வழிகாட்டுதலைப் பெறுவர்.

**பாடவேளை** : 01

**கற்றல் பேறு** :

- இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள், அதனை வெற்றி கொண்ட முறைகள் தொடர்பான கருத்துக்களைச் சேகரிப்பர்.
- சோதனைகளை வெற்றி கொள்ள இறைவார்த்தை அடித்தளமாக இருக்கின்றது.
- ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.
- தூய ஆவியின் வழிநடத்தலால் சோதனைகளை வெற்றி கொள்ள முடியும் என விசுவாசிப்பர்.
- வாழ்வில் சோதனைகளை வெற்றிகொள்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவர்கள் சிலரை தமது வாழ்வில் முகங்கொடுத்த சோதனைகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

    - எமக்கு பலவிதமான சோதனைகள் வருகின்றன.
    - இயேசுவுக்கும் சோதனைகள் ஏற்பட்டது.
    - இறைவார்த்தையால் சோதனைகளை வெற்றிகொள்ள முடியும்.

(8 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வுபத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.

    - தூய ஆவியானவரால் இயேசு பாலைநிலத்திற்கு கொண்டு போகப்பட்டார்.
    - இயேசு 40 நாட்கள் பாலைநிலத்தில் இறைவேண்டல் செய்தார்.
    - இயேசு அலகையினால் சோதிக்கப்பட்டார்.
    - இயேசு சோதனைகளை வெற்றிகொண்டார்.

- பல்வேறு வழிகளில் அலகையினால் சோதனைகள் வருகின்றன.
- மனிதர் இறைவனுக்கு மாத்திரமே வணங்க வேண்டும்.
- தூய ஆவியானவரின் வழிநடத்தலால் சோதனைகளை வெற்றி கொள்ளலாம்.

(12 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (லூக்கா 4:1-13)
- A4 தாள் , பேனை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- **லூக்கா 4:1-13** திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- திருவிவிலிய பகுதியில் வெளிப்படும் கருத்துக்களை கலந்துரையாடுங்கள்.

குழு : 1

- இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகளை அட்டவணைப்படுத்துங்கள்.
- இயேசு சோதனைகளுக்கு முகங்கொடுத்த முறைகளை ஒழுங்குமுறையில் அட்டவணைப் படுத்துங்கள்.
- சோதனைகளுக்கு உட்படாதிருக்க இயேசுவுக்கு எவ்வாறு முடிந்தது என்பதை வலியுறுத்தி கிறிஸ்தவ சஞ்சிகையொன்றுக்கு கடிதம் எழுதுக.

குழு : 2

- சாதாரண வாழ்வில் நீங்கள் முகங்கொடுக்கும் சோதனைகளையும் உங்கள் ஆன்மீக வாழ்வை பாதிக்கின்ற சோதனைகளையும் அதனை வெற்றிகொள்ளும் முறைகளையும் வகைப்படுத்துங்கள்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**வீட்டுச் சூழல்**

தொடர்பு சாதனங்களை உகந்த முறையில் பயன்படுத்த பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 3:0** : தூய ஆவியானவரால் துணிவும் சக்தியும் பெற்று புது வாழ்வின் அனுபவத்தை பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 10.3:3** : தெளிவான தோற்றத்துடன் வாழ்வை உருவமைத்துக் கொள்வர்.

**பாடவேளை** : 01

**கற்றல் பேறு** :

- இயேசுவின் தோற்றம் மாறுதல் நிகழ்வை ஆழமாக கற்பர்.
- இந்நிகழ்வின் மூலம் சீடர்கள் புதிய எதிர்நோக்கில் ஈடுபட்டனர் என ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை முன்வைப்பர்.
- இயேசு இறைமைந்தன் என விசுவாசிப்பர்.
- இயேசுவின் பணியில் பங்குகொள்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இயேசுவின் மறுரூபமாதல் தொடர்பான படமொன்றை மாணவருக்கு காட்சிப்படுத்துங்கள்.
- அதனைக்கொண்டு பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தி கலந்துரையாடுங்கள்.
  - இயேசு பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானுடன் மலைமீது ஏறினார்.
  - இயேசுவின் இரு பக்கத்திலும் மோசேயும் எலியாவும் இருந்தனர்.
  - அவரது ஆடைகள் வெண்மையாய் மின்னியது.

(8 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வு பத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.
  - இயேசு இறைவேண்டல் செய்து கொண்டிருந்தார்.
  - இயேசு தோற்றம் மாறினார்.
  - அவரது முகமும் ஆடைகளும் மாற்றத்துக்குள்ளானது.
  - மோசேயும் எலியாவும் திருச்சட்டத்திலும் இறைவாக்குகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
  - மோசேயும் எலியாவும் அவரது சிலுவை மரணத்தை பற்றி உரையாடிக்கொண்டிருந்தனர்.
  - பேதுரு 3 கூடாரங்களை அமைப்பதற்கு எண்ணினார்.
  - சீடர்களுக்கு சரியான தோற்றத்தை நோக்கி செல்ல இந்நிகழ்வு பின்னர் உதவியாயிருந்தது.

(20 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (லூக்கா 9:28-36)
- A4 தாள், பேனை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- லூக்கா 9:28-36 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- திருவிவிலிய பகுதியில் வெளிப்படும் கருத்துக்களை கலந்துரையாடுங்கள்.

குழு : 1

- இயேசுவின் தோற்றம் மாறுதல் நிகழ்வை மாதிரி நடிப்பின் மூலம் முன்வையுங்கள்.

குழு : 2

- இயேசுவின் தோற்றம் மாறுதல் நிகழ்வை கற்றறிந்து தான் பேதுரு என நினைத்து அன்றைய நிகழ்வு தொடர்பான ஆன்ம அறிக்கையொன்றை தயாரியுங்கள்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

தெளிவான தோற்றத்திற்கேற்ப வாழ்வை கட்டியெழுப்புவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறை சமூகத்தை கட்டியெழுப்புவர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.1** : இறையரசின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- இறையரசு பற்றிய உவமைகளை விளங்கிக் கொள்வர்.
- இறையரசு வளர்ச்சியடைகின்றது என்பதை ஏற்றுக்கொள்வர்.
- உவமைகளின் உதவியுடன் இறையரசின் வளர்ச்சி தொடர்பான சிறு பக்கப்புரட்டி தயாரிப்பர்.
- இன்றைய உலகில் இறையரசு விருத்தியடைகின்றது என விசுவாசிப்பர்.
- இறையரசின் விருத்திக்காக இணைந்து செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

படிமுறை 1

- கடுகுவிதை, புளித்த மா, விதைக்கிறவன் உவமைக்கு பொருத்தமான படங்களை மாணவருக்கு கொடுத்து கருத்துக்களை கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

    - கடுகுவிதையானது படிப்படியாக பெரிய செடியாக வளர்ச்சி அடைகிறது.
    - புளிக்க வைக்கும் பொருளால் (ஈஸ்ட்) மா பொங்குகிறது.
    - உழவரின் காட்சி பல நாடுகளில் காணப்படுகிறது.
    - அறுவடை செய்தல் உழவரின் பிரதான செயலாகும்.
    - இயேசு கடுகுவிதை, புளித்தமா, விதைக்கிறவன் தொடர்பான உவமைகளை கூறியுள்ளார்.

(10 நிமிடங்கள்)

படிமுறை 2

- லூக்கா 8:4-15, லூக்கா 13:18-21 திருவிவிலிய பகுதிகளை இரு மாணவர் மூலம் வகுப்பில் வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வுபத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(30 நிமிடங்கள்)

படிமுறை 3

- மாணவர் தமது ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.

    - இறையரசின் வளர்ச்சியை எடுத்துக்காட்ட இயேசு, கடுகுவிதை, புளித்த மா உவமைகளை உபயோகித்தார்.

- கடுகுவிதைக்கும் புளித்தமாவுக்கும் இறையரசு சமமானது என இயேசு கூறினார். லூக்கா 18:21
- விதைக்கிறவன் உவமையால் பலன்கொடுத்தலைப் பற்றி இயேசு வெளிப்படுத்தினார். லூக்கா 8:4-15
- இறையரசு சிறிதாக ஆரம்பமாகி வேகமாக விருத்தி அடைகின்றது.
- இடையூறுகள், பின்னடைவுகள் மத்தியிலும் இறையரசானது பலன் தருகின்றது.
- இன்றும் உலகில் இறையரசு விருத்தியை நோக்கி பயணம் செய்கின்றது.
- கிறிஸ்தவர்கள் வாழ்வில் பலன் கொடுத்து இறையரசின் விருத்தியில் பங்குதாரர்களாக வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம் (லூக்கா 8:4-15, 13:18-21)
- A4 தாள், மாக்கர் பேனைகள்
- கடுகுவிதை, புளித்த மா, விதைக்கிறவன் உவமைக்கு பொருத்தமான படங்கள்.
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

**குழு : 1 லூக்கா 13:18-19**

**குழு : 2 லூக்கா 13:20-21**

**குழு : 3 லூக்கா 13:4-15**

- மேல் காணும் திருவிவிலிய பகுதியை குறித்து கலந்துரையாடுங்கள்.
- குழுவுக்குரிய உவமையைக்கொண்டு இறையரசின் விருத்திக்கு பொருத்தமாக சிறு பக்கப்புரட்டியை ஆக்குங்கள்.

**குழு : 1 கடுகுவிதையும் இறையரசின் விருத்தியும்**

**குழு : 2 புளித்தமா உவமையும் இறையரசின் விருத்தியும்**

**குழு : 3 விதைக்கிறவன் உவமையும் பலன் கொடுத்தலும்**

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

வீட்டுத்தோட்டத்தில் செடிகளை நட்டு அவைகளை பராமரிப்பதில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறை சமூகத்தை கட்டியெழுப்புவர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.2** : இறையரசின் அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் இறை வல்லமையை காண்பர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- இறையரசின் அற்புதங்கள் அடையாளங்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பர்.
- இயேசு பல அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார் என ஏற்றுக்கொளவர்.
- இறையரசின் அற்புதங்கள் அடையாளங்கள் பற்றிய ஆக்கபூர்வமான அறிக்கை சமர்ப்பிப்பர்.
- நாளாந்த வாழ்வில் இறைவல்லமையை விசுவாசத்துடன் அனுபவிப்பர்.
- அற்புதங்களையும் அடையாளங்களையும் அனுபவப்பூர்வமாக கண்டு இறையரசின் பணியில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- நாளிதழ் தகவல், இணையத்தள தகவல்கள், படங்கள் பற்றிய கருத்துக்களை பகிர்ந்துகொள்ள மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - பல்வேறு நோய்கள், பிரச்சினைகளால் உலகில் மக்கள் பல துன்பங்களை வாழ்வில் அனுபவிக்கின்றார்கள்.
  - எதிர்ப்பார்ப்புகள் எதுவுமின்றி பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.
  - புதிய மருந்து கண்டுபிடிப்புகள், நவீன அறுவை சிகிச்சை முறைகளால் மனிதரின் குணமடைதல் பற்றிய எதிர்ப்பார்ப்பு உயர்வடைந்துள்ளது.
  - திருப்பணியாளர்களால் இறைவனின் அற்புதமான சுகத்தை அனுபவித்த மக்கள் உலகில் வாழ்கின்றனர்.
  - இயேசு பல நோயாளரை குணமாக்கியுள்ளார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வு பத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(65 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.

- இயேசு செய்த அற்புதங்களும் அடையாளங்களும் நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- கற்றுக்கொள்வதற்கு இலகுவாக அமையும் வண்ணமாக இயேசு செய்த அற்புதங்களும் அடையாளங்களும் 4 வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- இயேசு இயற்கைக்கு மேலாக இறைவல்லமையுடன் செயற்பட்டார். (லூக்கா 8:22-25)
- காற்றையும் கடல் கொந்தளிப்பையும் அடக்குதல் லூக்கா 9:10-17), 5000 பேருக்கு உணவளித்தல் என்பன இயேசு செய்த அற்புதங்கள்.
- இயேசு இறந்தோரை உயிரோடு எழுப்பினார். (லூக்கா 8:40-42, 8:11-17)
- இயேசு தீய ஆவிகளை துரத்தி தீய வல்லமையை வெற்றிகொண்டார். (லூக்கா 4:31-37, 11:14-23)
- பல நோயாளர்கள் இயேசுவால் குணமடைந்தனர். (லூக்கா 18:35-43, லூக்கா 7:1-10).
- எமது வாழ்வில் நாள்தோறும் இறைவல்லமையை அனுபவபூர்வமாக காணவேண்டும்.
- விசுவாசத்தால் தீய ஆவிகளை விரட்ட முயல வேண்டும்.
- இறையரசின் அற்புதங்களை அடையாளங்களை அனுபவத்தில் கண்டு எப்போதும் இறையரசின் பணியில் ஈடுபட வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம் (லூக்கா 8:22-25, 9:10-17, 8:40-42, 49-56, 7:11-17, 4:31-37, 11:14-23, 18:35-43, 7:1-10)
- A4 தாள் , மாக்கர் பேனைகள்
- குணப்படுத்த முடியாத, இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள மருந்து வகைகள், உலக செயற்பாடுகள் குறித்த நாளிதழ், இணையத்தள தகவல்கள், படங்கள் (தகவல்களை சேகரிக்குமாறு ஒரு வாரத்திற்கு முன்னரே அறிவியுங்கள்.)
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- குழுவுக்கு வழங்கப்பட்ட திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.

குழு : 1 **லூக்கா 8:22-25, 9:10-17**

குழு : 2 **லூக்கா 8:40-42, 49-56, 7:11-17**

குழு : 3 **லூக்கா 4:31-37, 11:14-23**

குழு : 4 **லூக்கா 18:35-43, 7:1-10**

- திருவிவிலிய பகுதியை குறித்து கலந்துரையாடுங்கள்.
- குழுவுக்குரிய வழங்கப்பட்ட தலைப்புக்கேற்ப ஆக்கபூர்வமான அறிக்கை தயாரியுங்கள்.

**குழு : 1** இயற்கைக்கு மேலான அற்புதம்

**குழு : 2** மரணத்திலிருந்து எழுப்பியதால் வெளிப்பட்ட இறைவல்லமை

**குழு : 3** இறைவல்லமையால் தீய வல்லமையை அழித்தல்

**குழு : 4** அற்புதங்களால் அனுபவித்த சுகம்

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

குடும்ப ஜெபத்தில் நோயாளருக்காக வேண்டுதல் செய்வதற்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறை சமூகத்தை கட்டியெழுப்புவர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.3** : கிறிஸ்தவ கொள்கைகளுக்கு ஏற்ப வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- இறையரசின் கொள்கைகளை விபரிப்பர்.
- இறையரசின் கொள்கைகளுக்கேற்ப வாழ வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- இறையரசின் கொள்கைப் பட்டியலை ஆக்கபூர்வமாக எழுதிக்காட்டுவர்.
- இறையரசின் கொள்கைகளுக்கேற்ப வாழும்போது வாழ்வானது நல்வழிப்படும் என்பதை விசுவாசிப்பர்.
- இறையரசின் கொள்கைகளை மதித்து வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- கொள்கை என்றால் என்ன? என்பது குறித்து மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- கரும்பலகையில் பிரிஸ்டல் மட்டையை பொருத்துங்கள்.
- வாழ்வில் காணப்படும் ஏதாவதொரு கொள்கையை அதில் குறிப்பிட இடமளியுங்கள்.
- எழுதப்பட்ட கொள்கைப் பட்டியலை உரத்த சத்தமாக வாசிக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- அதனைக் கொண்டு பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - எமது வாழ்வுக்கு கொள்கைகள் அவசியம்.
  - அனைத்து நாடுகளுக்கும் கொள்கை வெளியிடும் உரிமை உள்ளது.
  - தனித்துவமாக அடையாளப்படுத்தப்பட்ட கொள்கைகள் நடைமுறையில் காணப்படுகின்றன.
  - வாழ்வானது கொள்கைகளால் நல்வழிப்படுத்தப்படுகின்றது.
  - இயேசு கிறிஸ்தவர்களுக்கு ஏற்ற கொள்கைகளை கூறினார்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- லூக்கா 14:15-24, 15:1-32 திருவிவிலிய பகுதியை மாணவர் வகுப்பில் வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- திருவிவிலியத்தையும் ஆய்வுபத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப்படுத்துங்கள்.

  - இறையரசுக்கு பொருத்தமான கொள்கைகள் உள்ளன.
  - இயேசு உவமைகள் மூலமாக இறையரசின் கொள்கைகளை விளக்கினார்.
  - பெரிய விருந்தின் உவமை மூலமாக இறையரசுக்கான அழைப்பு வெளிப்படுகின்றது. (லூக்கா 14:15-24)

- இறையரசுக்கான அழைப்பு வழங்குபவர் இறைவன்.
- இறையரசு அனைவருக்கும் திறந்துள்ளது.
- இறையரசின் அழைப்புக்கு நாம் எப்போதும் மாறுத்தரம் காட்ட வேண்டும்.
- இறையரசின் முக்கியமான கொள்கைகள் வெளிப்படும் முறைகள். காணாமற்போன மகன், காணாமற்போன காசு, காணாமற்போன ஆடு (லூக்கா 15:1-32)
- இறையரசில் ஒருவர் காணாமல் போனாலும் அது முழுமைக்கு குறைவாகும்.
- வழி தவறி செல்லும் நபருடன் நாம் அன்புடன் செயற்பட வேண்டும்.
- கிறிஸ்தவர் இறையரசின் கொள்கைகளுக்கு கீழ்படிந்து செயற்படவேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம் (லூக்கா 14:15-24, 15:1-32)
- பிரிஸ்டல் மட்டை
- A4 தாள் , மாக்கர் பேனைகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- **லூக்கா 14:15-24, 15:1-32** திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- அதற்கேற்ப **கிறிஸ்தவருக்கான கொள்கைப் பட்டியலை** எழுதிக் காட்டுங்கள்.
- உங்களது ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**வீட்டுச் சூழல்**

வழி தவறி சென்ற நண்பரை அன்புடன் நல்வழிப்படுத்துவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறை சமூகத்தை கட்டியெழுப்புவர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.4** : தமது ஆற்றல்களை இறை மகிமைக்காக பணிவுடன் பயன்படுத்துவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- இறையரசின் பிரஜைகளின் பண்புகள், இயல்புகளை விளங்கிக் கொள்வர்.
- கிறிஸ்தவர் இறை மகிமைக்காக பணிவோடு தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கபூர்வமான நாடக பிரதியை தயாரிப்பர்.
- நற்பண்புகளை வளர்த்துக்கொண்டு பணியாற்ற வேண்டும் என விசுவாசிப்பர்.
- நற்பணிகளில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவரை 4 குழுக்களாக்கி ஒரு குழுவுக்கு இரு படங்கள் வீதம் வழங்குங்கள்.
- குழுகளுக்குள்ளே சிறு கலந்துரையாடலை வழிநடத்துங்கள்.
- இரு மாணவர்களுக்கு அப்படங்கள் தொடர்பான கருத்துக்களை தெரிவிக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்துங்கள்.
  - இந்நபர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள்.
  - இவர்கள் பல இனங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.
  - இவர்களின் வாழ்வின் மூலம் நற்பண்புகள் வெளிப்பட்டன.
  - இந்நபர்கள் உலகில் அளப்பரிய பணிகளை பணிவுடன் ஆற்றினர்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வு பத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.
  - இறையரசின் பிரஜைகள் தமது வாழ்வின் மூலம் விசேட பண்புகளை வெளிப்படுத்த வேண்டும்.
  - இயேசுவின் படிப்பினைகளுக்கேற்ப இறையரசின் பிரஜைகள் எப்போதும் நல்லதையும் சரியானதையும் செய்யவேண்டும்.

- பணியாள் தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும் .(லூக் 22:24-30)
- மற்றவருக்காக உழைத்தல் (லூக் 10:25-37)
- முன்மதியோடு செயற்படுதல் இறையரசின் பிரஜைகளின் பொறுப்பாகும்.(லூக் 16:1-9)
- இறையரசின் பிரஜைகள் மற்றவரின் நல்வாழ்வை கட்டியெழுப்ப தன்னை அர்ப்பணிக்க வேண்டும்.(லூக் 19:1-27)
- கிறிஸ்தவ பண்புகளை விருத்தி செய்து இறை மகிமைக்காக பணியாற்ற வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம் (லூக்கா 22:24-30, 10:25-37, 16:1-9, 19:11-27)
- தெரேசா அம்மையார், மகாத்மா காந்தி, அருட்தந்தை. மைக்கல் றொட்ரிகோ, ஆபிரகாம் லிங்கன், மாட்டின் லூதர் கிங், புளோரன்ஸ் நைட்டின் கேர்ள், அருட்தந்தை. ஜோசப்வாஸ், இவ்லின் கார்னி போன்றோரின் படங்கள்.
- A4 தாள், மாக்கர் பேனைகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- உங்கள் குழுக்களுக்கு கிடைக்கப்பெற்ற திருவிவிலிய பகுதியை வாசித்து கலந்துரையாடுங்கள்.
- உங்களுக்கு கிடைத்த தலைப்புக்கு ஏற்ப நாடக பிரதியை உருவாக்குங்கள்.

குழு : 1 **லூக்கா** 22:24-30 - “இறையரசில் பணியாளர்களே தலைவர்கள்”

குழு : 2 **லூக்கா** 10:25-37 - “உழைப்போடு அர்ப்பணிப்போம்”

குழு : 3 **லூக்கா** 16:1-9 - “முன்மதியோடு இறையரசில் செயலாற்றுவோம்.”

குழு : 4 **லூக்கா** 18:11-27 - “பணிக்காக எமது ஆற்றல்கள்”

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

எப்போதும் அயலவர்களுக்கு உதவி செய்வதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறை சமூகத்தை கட்டியெழுப்புவர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.5** : இறையரசு பிரஜைகளின் கடமைகளை கிரகிப்பர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- இறையரசின் சவால் நிறைந்த நிலையினை விளக்குவர்.
- சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என ஏற்றுக்கொள்வர்.
- ''இறையரசின் பிரஜைகளுக்கு இயேசுவின் சவால்'' எனும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதுவர்.
- சவால்களை வெற்றிகொள்ள இயேசு துணிவை தருகிறார் என்பதை விசுவாசிப்பர்.
- சவால்களை வெற்றி கொண்டு ஒன்றித்து செயல்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- சவால்களை வெற்றிகொள்ளல் தொடர்பான படத்துடன் கூடிய கதையை வகுப்பில் முன்வையுங்கள்.
- அக்கதையில் தான் சிந்தனைக்கு எடுத்துக்கொண்ட பகுதியை அட்டவணைப்படுத்த அறிவுறுத்துங்கள்.
- எழுதப்பட்ட கருத்துக்களை வகுப்பில் முன்வைப்பதற்கு இடமளியுங்கள்.
- அதனைக் கொண்டு பின்வரும் கருத்துக்களை வலியுறுத்துங்கள்.

  - அனைத்து நபர்களுக்கும் வாழ்க்கை சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும்.
  - வெவ்வேறு விதமாக சவால்கள் ஏற்படுகின்றன.
  - சொத்துக்கள், அதிகாரங்கள் போன்றவையும் சவால்களாக முடியும்.
  - வாழ்க்கை சவால்களை முறியடித்து முன்செல்ல வேண்டும்.
  - சவால்களுக்கு முகங்கொடுப்பதினூடாக வாழ்வில் துணிவு கிடைக்கின்றது.
  - சவால்களை வெற்றிகொள்வதற்கு இறைவன் வழிநடத்துகிறார்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- திருவிவிலியத்தையும் ஆய்வுபத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது ஆக்கங்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப்படுத்துங்கள்.

  - இறையரசின் பிரஜைகளின் வாழ்க்கை இலகுவானதல்ல.
  - இறையரசின் பிரஜைகளாக பல சவாலான சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்படும்.
  - இறையரசின் பிரஜைகளாக முகங்கொடுக்கவேண்டிய சவால்கள் பற்றி இயேசு எச்சரிக்கை அளித்த விதங்கள்.

- இயேசுவின் சிலுவையை சுமந்துகொண்டு அவரை பின்பற்ற வேண்டும். (லூக் 9:57-62)
- சொத்துகள் மற்றும் உலக செல்வங்களை கொண்ட வாழ்வின் நிலை (லூக் 12:13-34, 18:18-30, 16:19-31)
- ஆன்மீகத்தில் முழுமை பெறுதல் அவசியம்.
- இறையரசின் பிரஜையாகும் தன்மை பெறும் தீர்மானத்தின் பொறுப்பு (லூக் 14:25-33)
- பணிவுடன் பணியாற்றுதலின் முக்கியத்துவம்.
- அனைத்து சவால்களையும் வெற்றிக்கொள்ள இயேசு பலத்தையும் துணிவையும் தருகிறார்.
- கிறிஸ்தவர்கள் இறையரசின் பிரஜைகளாக அதன் பாரதூரமான தன்மையை அறிந்து வாழவேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம் (லூக்கா 9:57-62, 12:13-34, 18:18-30, 16:19-31, 14:25-33, 18:9-14)
- சவால்களை வெற்றிகொள்ளல் தொடர்பான படத்துடன் கூடிய கதை
- A4 தாள், மாக்கர் பேனைகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**
**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

**லூக்கா 9:57-62, 12:13-34, 18:18-30, 16:19-31, 14:25-33, 18:9-14** திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.

- **"இறையரசின் பிரஜைகளுக்கு இயேசுவின் சவால்"** எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

வாழ்க்கை சவால்களில் இயேசுவின் துணிவை வேண்டி மன்றாடுவதில் ஈடுபடுத்துங்கள்

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்கம் நிறை சமூகத்தை கட்டியெழுப்புவர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.6** : கிறிஸ்தவருக்குரிய முறையில் கடமைகளை விழிப்புடன் செய்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- இறையரசின் பிரஜைகள் சரியான ஆயத்தத்துடன் செயற்பட வேண்டிய முறையை விளக்குவர்.
- ஆயத்தமாகுதல் அவசியம் என ஏற்றுக்கொள்வர்.
- பாடலொன்றை தயாரிப்பர்.
- ஆயத்தத்தோடும் அர்ப்பணிப்போடும் செயற்படுவோருக்கு நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்ள முடியும் என விசுவாசிப்பர்.
- சரியான ஆயத்தத்துடன் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- ஏதாவது இலகுவான செயற்பாடொன்றை செய்வதற்கு ஆயத்தமாகுமாறு மாணவருக்கு கூறுங்கள்.
- கடதாசியை கொடுத்து 2 நிமிடங்களுக்குள் படகு அல்லது விசிறி செய்வதற்கு அறிவுறுத்துங்கள்.
- குறிப்பிட்ட நேரத்தில் செயற்பாட்டை நிறுத்துங்கள்.
- அதனைக் கொண்டு பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தி கலந்துரையாடுங்கள்.

  - எந்தவொரு செயற்பாட்டுக்கு முன்னரும் ஆயத்தமாகுதல் அவசியமாகும்.
  - சரியான ஆயத்தத்தோடு செயற்படுவோருக்கு சரியாக செயல்பாட்டில் ஈடுபடமுடியும்.
  - ஆயத்தத்தோடு செயற்பட்டு சவால்களை வெற்றி கொள்ள முடியும்.
  - அன்றாட செயற்பாடுகளை ஒழுங்காக செய்வதற்கு சரியாக ஆயத்தமாக வேண்டிய முறைகள்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வு பத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப்படுத்துங்கள்.

  - இறையரசின் தீர்மானிக்கும் நிலை தொடர்பாக இயேசு எச்சரிக்கை அளித்தார்.
  - கிறிஸ்து மீண்டும் வரும் வரையும் இறைவிருப்பத்தை நிறைவேற்றி நம்பிக்கையோடு இருக்க வேண்டும். (லூக் 12:35-40)

- நிலைவாழ்வை பெற்றுக்கொள்வதற்கு மனமாற்றம் அவசியமாகும். (லூக் 13:1-9)
- இறையரசிற்குள் நுழைதல் இடுக்கமான வாயிலுக்குள் நுழைவதைப்போல் கடினமாகும். (லூக் 13:22-30)
- இறையரசின் பணிக்காக அர்ப்பணித்தவர்கள் மிகவும் பொறுப்புடன் பணியாற்ற வேண்டும். (லூக் 12:42-48)
- சரியான ஆயத்தத்துடன் இறையரசின் பிரஜைகளாக செயற்படவேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (லூக்கா 12:35-40, 13:1-9, 13:22-30, 12:42-48)
- A4 தாள், மாக்கர் பேனைகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுக்களுக்கு கிடைக்கப்பெற்ற திருவிவிலிய பகுதியை வாசித்து கலந்துரையாடுங்கள்.
- அதன் கருத்துக்களை கொண்டு
  **"ஆயத்தத்தினால் வெற்றி பெறும் இறையரசின் பிரஜைகள்"** எனும் தலைப்பிற்கு பொருத்தமான பாடலொன்றை தயாரியுங்கள்.

குழு : 1 **லூக்கா** 12:35-40
குழு : 2 **லூக்கா** 13:1-9
குழு : 3 **லூக்கா** 13:22-30
குழு : 4 **லூக்கா** 12:42-48

- உங்களது ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**வீட்டுச் சூழல்**

பாடசாலை செயற்பாடுகளுக்கு எப்போதும் ஆயத்தமாகுவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 5:0** : திருவிவிலியத்தை வாழ்வுக்கு வழிகாட்டியாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.5.1** : இறைவார்த்தையால் ஒளி பெறுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- சமவெளிப் பொழிவில் வெளிப்படும் கருத்துக்களை அட்டவணைப்படுத்துவர்.
- பகைவரை நேசிக்க வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கபூர்வமான செயற்பாட்டை முன்வைப்பர்.
- இறைவார்த்தையில் வாழ்வை கட்டியெழுப்புவர்.
- சமுதாயத்தில் மற்றவர்களோடு இணைந்து வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2 ஐ மாணவருக்கு வழங்கி அதனை பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இறை வார்த்தை வாழ்வுக்கு அவசியம் என்பதை வலியுறுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
  - இறைவார்த்தை எமது வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.
  - இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயற்படவேண்டும்.
  - அனைவரையும் நேசித்து வாழவேண்டும்.
  - எமது வாழ்வில் நற்பண்புகள் வெளிப்பட வேண்டும்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வுபத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(65 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.
  - சமவெளிப் பொழிவில் பேறுபெற்றோர் நால்வர் ஆவர்.
  - கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் அன்பாகும்.
  - பிறரைக் குற்றப்படுத்தாது வாழுதல் உகந்தது.
  - இறைவார்த்ததை எனும் உறுதியான அடித்தளத்தில் எமது வாழ்வு கட்டியெழுப்பப்பட வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம் (லூக்கா 6:17-49, 20-26, 27-36, 37-42, 43-45, 46-49)

- A4 தாள் , மாக்கர் பேனைகள்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- பின்வரும் திருவிவிலிய பகுதிகளை அமைதியாக வாசியுங்கள்.
  **லூக்கா 6:17-49, 20-26, 27-36, 37-42, 43-45, 46-49**
- திருவிவிலிய பகுதிகள் உங்கள் வாழ்வுக்கு ஒளிகொடுக்கின்ற முறைகளை ஆக்கபூர்வமாக முன்வையுங்கள். (கவிதை, வில்லுப்பாட்டு, உரையாடல்)
- பேறுபெற்றோரும் கேடுற்றோரும் தொடர்பான தகவல்களை வகைப்படுத்துங்கள்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

## இணைப்பு 2

வேதமே தீபமே
பாதைக்கு பண்புள்ள தீபமே

1. தேனிலும் இனிய வேதமே
   தித்திக்கும் திவ்விய வேதமே
   பாதைக்கு பண்புள்ள தீபமே
   பாக்கியமளிக்கும் பேரின்பமே - வேத

2. துன்பத்தில் இன்பம் அளிக்குமே
   தூய வழியைக் காட்டுமே
   மாயமான வாழ்வை நீக்குமே
   மாநிலத்தில் என்னைக் காக்குமே - வேத

3. என்னை எனக்குக் காட்டுமே
   நன்மையில் என்னை நாட்டுமே
   அல்லும் பகலும் என் ஆதரவே
   எல்லையில்லா இன்ப ஊற்றாமே - வேத

**வீட்டுச் சூழல்**

குடும்பமாக ஜெபிக்கும்போது திருவிவிலியத்தை வாசிப்பதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 5:0** : திருவிவிலியத்தை வாழ்வுக்கு வழிகாட்டியாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.5.2** : இயேசுவின் போதனைகளை அன்றாட வாழ்வில் பின்பற்றுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- இயேசுவின் போதனைகளில் வெளிப்படும் கருத்துக்களைச் சேகரிப்பர்.
- இயேசுவின் போதனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- அவதானமாக வினாக்களுக்கு விடையளிப்பர்.
- இறையாசிகளுக்காக நன்றி கூறுவர்.
- இயேசுவின் போதனைகளுக்கேற்ப ஒன்றித்து செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- தீப விளக்குகளை மாணவர்களிடம் கொடுத்து ஒளிரச்செய்ய இடமளியுங்கள்.
- குவளையில் நீர் ஊற்றி உப்பை கரைத்து சுவையை உணரச் செய்யுங்கள்.
- இவற்றினூடாக மாணவரின் கருத்துக்களை கூறுவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - நாம் ஒளியின் பிள்ளைகளாக திகழ வேண்டும்.
    - உப்பைப் போன்று பிறருக்கு பயனுள்ளவர்களாக வாழ வேண்டும்.
    - கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வில் வெளிப்படுத்தவேண்டும்.
    - இயேசுவின் போதனைகளை எமக்கு உறுதுணையாக்கிக் கொள்ள வேண்டும்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தையும் ஆய்வுபத்திரத்தையும் பெற்றுக்கொடுங்கள். (இணைப்பு 1)
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(65 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் தொகுத்து பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.
    - நாம் எப்போதும் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் (லூக் 17:11-19)
    - விண்ணக மன்றாடல் நாளாந்த வாழ்வுக்கு அவசியமானது. (லூக்11:1-13, 18:1-8)
    - நாம் பிறரது வாழ்வை ஒளியூட்ட வேண்டும் (லூக் 8:16-18)
    - இறைவன் எமக்கு எல்லாவற்றையும் தருகிறார்.(லூக்12:22-32)
    - சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களில் நாம் கரிசனை கொள்ள வேண்டும். (லூக் 14:7-11)
    - தங்களுக்கு உள்ள அனைத்தையும் இறைவனுக்கு அரப்பணிக்க வேண்டும்.

(லூக் 21:1-4)

- எதிர்ப்பார்ப்பின்றி இறைவனுக்கு பணியாற்ற வேண்டும். (லூக் 14:34-35)
- விசுவாசத்துடன் செயற்பட வேண்டும். (லூக் 17:5-10)

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (லூக்கா 11:1-13, 18:1-8, 8:16-18, 14:7-11, 21:1-4, 17:5-10, 12:22-32, 14:34-35, 17:11-19)
- தீ விளக்குகள், உப்பு
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- பின்வரும் திருவிவிலிய பகுதிகளை வாசியுங்கள்.

| குழு 1 | குழு 2 | குழு 3 |
|---|---|---|
| **லூக்கா 11:1-13** | **லூக்கா 18:1-8** | **லூக்கா 21:1-4** |
| **லூக்கா 8:16-18** | **லூக்கா 14:7-11** | **லூக்கா 12:22-32** |
| **லூக்கா 14:34-35** | **லூக்கா 17:5-10** | **லூக்கா 17:11-19** |

- மேற்கூறிய திருவிவிலிய பகுதிகளுக்கேற்ப பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
  1. நீர் வாசித்த திருமறை பகுதிகளிலிருந்து நீங்கள் அறிந்து கொண்ட இயேசுவின் போதனைகள் எவை?
  2. உமது நாளாந்த வாழ்க்கையில் இயேசுவின் போதனைகளை செயற்படுத்து வதற்கான சந்தர்ப்பங்களை கூறுக.
  3. இயேசுவின் போதனைகளை பின்பற்றி வாழும்போது எமக்கு ஏற்படும் சவால்கள் எவை?
  4. இறையாசிகளுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தி விண்ணப்பம் ஒன்றை எழுதுக.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

பிள்ளைகளை நாளாந்தம் குடும்ப செபத்தில் ஈடுபடுத்துங்கள்.

**கணணி பதிப்பு :** செல்வி.த. ஸ்டெலா தர்ஷினி
திருமதி. எம்.பி. செல்வநிதி பெரேரா
செல்வி. தயானா மோசெஸ்
திரு. டயஸ் அமரசிங்க